பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 05 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கு 5ஆம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நாளையுடன் நிறைவடைய உள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

2. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் இந்தியாவின் ஒருபகுதி என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் மீண்டும் உறுதிபட கூறியுள்ளார்.

3. ஆந்திரப்பிரதேசத்தில் வாக்குப்பதிவுக்குப் பின் வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர், காவல்துறைத் தலைவருக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

4. நாட்டின் வடமேற்குப் பகுதியில் அடுத்த 5 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Elorda** கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் நிகத் ஸரீன் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மக்களவைக்கு 5ஆம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நாளையுடன் நிறைவடைய உள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி தலைவர் திரு. ஜேபி. நட்டா நேற்று ஒடிசா மாநிலத்தின் சுந்தர்கர், பார்கர் மக்களவைத் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிஜு ஜனதாதள தலைவரும், ஒடிசா முதலமைச்சருமான திரு. நவீன்பட்நாயக் புவனேஸ்வரில் வாக்கு சேகரித்தார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே கந்தமால் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட புல்பானி என்ற இடத்தில் உரையாற்றினார்.

8 மாநிலங்களில் உள்ள 49 தொகுதிகளில் இம்மாதம் 20ஆம் தேதி 5ஆம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

<<<<>>>>

ஆந்திரப்பிரதேசத்தில் வாக்குப்பதிவுக்குப் பின் நடைபெற்ற வன்முறையை அடுத்து தேர்தல் ஆணையம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அம்மாநில தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறை தலைவருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஆந்திரப்பிரதேசத்தில் வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகும் மத்திய ஆயுத காவல்படையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று உள்துறை அமைச்சகத்திற்கு தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர்கள் திரு. கியானேஷ்குமார், திரு. சுக்பிர் சிங் சாந்து ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுபோன்ற வன்முறை சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

முன்னதாக வன்முறையை கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட நிர்வாக தோல்வி குறித்து விளக்கமளிக்குமாறு ஆந்திரப்பிரதேச தலைமைச் செயலாளருக்கும், காவல்துறை தலைவருக்கும் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

வாக்குப்பதிவுக்குப் பிறகு ஆனந்தபுரமு, பல்நாடு மற்றும் திருப்பதி மாவட்டங்களில் வாக்குப்பதிவு நாளன்றும், அதன்பிறகும் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதை அடுத்து தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

தேர்தல் ஆணையம் மற்ற நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழ்வதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதுகுறித்து ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், அதன் சிறப்பான பணிகளை உலகிற்கு வெளிப்படுத்துவது தமது அரசின் கடமை என்று கூறினார்.

கட்சியின் கருத்துகளை மக்களுக்கு நேரடியாக தெரிவிக்க தேர்தல் மூலம் வாய்ப்பளிக்கப்படுவதாக திரு. மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் இந்தியாவின் ஒருபகுதி என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் மீண்டும் உறுதிபட கூறியுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிலருடைய பலவீனம் காரணமாக தற்காலிகமாக அப்பகுதி இல்லை என்று தெரிவித்தார்.

முசாஃபர்பாதில் அண்மையில் நடைபெற்ற போராட்டம் குறித்து குறிப்பிட்ட திரு. ஜெய்சங்கர், தாங்கள் தவறாக வழிநடத்தப்படுவது குறித்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் உள்ள மக்கள் கேள்வி எழுப்ப தொடங்கியுள்ளதாக கூறினார்.

கனடா அரசு குறித்த கேள்விக்கு பதிலளித்த திரு. ஜெய்சங்கர், பேச்சு சுதந்திரத்தை பிரிவினைவாதத்திற்கும், வன்முறைக்கும் ஆதரவளிக்க பயன்படுத்தக் கூடாது என்றும், வாக்குகளுக்காக கனடா ஆளும் அரசு அவ்வாறு நடந்துகொள்வதாகவும் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

செமி கண்டக்டர் உற்பத்தி மற்றும் தொலைதொடர்பு சேவைகளில் உலக நாடுகளின் கேந்திரமாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 10 ஆண்டுகளுக்கு முன்பு 98 சதவீத அளவிற்கு மொபைல் ஃபோன்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், தற்போது 99 சதவீத அளவிற்கு உள்நாட்டிலேயே மொபைல் ஃபோன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

உலகிலேயே விரைவான 5-ஜி அலைக்கற்றை வசதியை இந்தியா கொண்டுள்ளதாக தெரிவித்த அவர், இதில் பயன்படுத்தப்படும் உபகரணங்களில் 80 சதவீதம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

ரயில்வே கட்டமைப்பு குறித்து பேசிய திரு. அஷ்வினி வைஷ்ணவ், கடந்த நிதியாண்டில் 5 ஆயிரத்து 300 கிலோ மீட்டர் தொலைவிற்கு ரயில் வழித்தடங்கள் அமைக்கப்பட்டதாக கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் 44 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவிலான ரயல் வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் வடமேற்குப் பகுதி மற்றும் பீஹாரில் அடுத்த 5 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தானின் மேற்குப் பகுதி பஞ்சாப், ஹரியானா மற்றும் தில்லியில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று கூறியுள்ளது.

கிழக்கு மற்றும் மத்தியப் பகுதிகளிலும் நாளை முதல் கடும் வெப்பநிலை ஏற்படலாம் என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, கர்நாடகாவின் தென்பகுதி ஆகிய இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம், அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ராஜஸ்தான் மாநிலம் ஸ்ரீகங்காநகர், பார்மர் பகுதியில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை 46 டிகிரி செல்சியசாக இருந்தது.

மாநிலத்தின் வடமேற்குப் பகுதியின் வெப்பநிலை 45 டிகிரி செல்சியசை தாண்டி நிலவியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆகாஷ்வாணி தலைமை இயக்குநராக திருமதி **Maushumi Chakravarty** நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்திய தகவல் பணியின் 1991ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த அவர், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பல்வேறு ஊடக பிரிவுகளில் பணிபுரிந்த அனுபவம் பெற்றவர் ஆவார்.

தமது 30 ஆண்டுகால பணியில் தேசிய மனித உரிமை ஆணையத்திலும் பொறுப்பு வகித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் நாகை மாவட்டம் கோடியக்கரை அருகே இந்திய எல்லையை தாண்டியதாக இலங்கை மீனவர்கள் 14 பேரை கடலோர காவல்படையினர் கைது செய்தனர்.

அவர்களுடைய 5 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை எழும்பூர் - விசாகப்பட்டினம் இடையே இம்மாதம் 28, அடுத்த மாதம் 4, 11, 18, 25 ஆகிய நாட்களில் கோடைகால சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளது.

அதேபோல் மறுமார்க்கத்தில் இம்மாதம் 27, அடுத்த மாதம் 3, 10, 17, 24 ஆகிய நாட்களில் இந்த ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

இதற்கிடையே காரைக்குடியில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகள் காரணமாக நாளை மறுநாள் இயக்கப்படவிருந்த திருச்சி — ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ரயில்சேவை இரு மார்க்கங்களிலும், காரைக்குடி — திருச்சி பயணிகள் ரயில் இரு மார்க்கங்களிலும் ரத்து செய்யப்படுவதாக தெற்கு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

**Trinidad Tobago** பிரதமர் திரு. **Keith Christopher Rowley** இந்திய சுற்றுப்பயணமாக நேற்று மும்பை வந்தடைந்தார்.

டிரினிடாடில் கிரிக்கெட் அகாடமி திறப்பது தொடர்பாக விவாதிப்பது குறித்தும் இருநாடுகளின் உறவை மேம்படுத்துவது குறித்தும் அவர் விவாதிக்க உள்ளார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியா பெற்ற சுதந்திரம் டிரினாட் டொபாகோவின் சுதந்திரத்திற்கு வழிவகுத்ததாக கூறினார்.

இந்திய முதலீடு தமது நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மும்பையில் முன்னணி தொழில்முனைவோருடன் பேச்சு நடத்திய அவர், இந்திய தொழில்முனைவோர்கள் டிரினாட் டொபாகோவில் முதலீடு செய்ய ஆர்வமுடன் இருப்பதாக அந்நாட்டு பிரதமர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

**Elorda** கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் நிகத் ஸரீன் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் **Tomiris Myrzakul**-ஐ 5-0 என்ற புள்ளிக் கணக்கில் வென்றார்.

48 கிலோ எடைப்பிரிவில் மீனாட்சியும், 50 கிலோ எடைப்பிரிவில் அனாமிகாவும், 60 கிலோ எடைப்பிரிவில் மனீஷாவும் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

போர்ச்சுகளில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - அர்ஜுன் கதே இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-3 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் **Dmitry Popke – Beibit Zhukayev** இணையை வென்றது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி பிளேஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஹைதராபாதில் நேற்று குஜராத் - ஹைதராபாத் அணிகளுக்கு இடையே நடைபெறுவதாக இருந்த ஆட்டம், மழை காரணமாக கைவிடப்பட்டதை அடுத்து, அந்த அணி புள்ளிக் கணக்கின் அடிப்படையில் பிளேஆஃப் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

இன்று நடைபெற உள்ள போட்டியில் மும்பை அணி — லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஒலிம்பிக் பதக்க இலக்கு திட்டத்தில் ஸ்குவாஷ் வீரர்கள் **Anahat Singh, Abhay Singh, Velavan Senthil Kumar** ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2028ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் இவர்கள் பதக்கம் பெறும் நோக்கில் உரிய பயிற்சி அளிக்கப்படும் என்று மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<The End>>>>**